## மே – 09 – புதன்
### புனித பீட்டர் நொலாஸ்கோ
### அவர் தம் மக்களின் ஆற்றலை உயர்வுறச் செய்தார்: திபா. 148:14

## முதல் வாசகம் திருத்தூதர் பணி 17:15– 22---18: 1

பவுலுடன் சென்றவர்கள் அவரை ஏதென்சு வரை அழைத்துச் சென்றார்கள். சீலாவும் திமொத்தேயுவும் விரைவில் வந்து சேரவேண்டும் என்னும் கட்டளையைப் பவுலிடமிருந்து பெற்றுக்கொண்டு அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.அரயோப்பாகு மன்றத்தின் நடுவில் பவுல் எழுந்துநின்று கூறியது "ஏதென்சு நகர மக்களே, நீங்கள் மிகுந்த சமயப் பற்றுள்ளவர்கள் என்பதை நான் காண்கிறேன்.நான் உங்களுடைய தொழுகையிடங்களை உற்றுப் பார்த்துக்கொண்டு வந்தபோது "அறியாத தெய்வத்துக்கு" என்று எழுதப்பட்டிருந்த பலிபீடம் ஒன்றைக்கண்டேன். நீங்கள் அறியாமல் வழிபட்டுக் கொண்டிருக்கும் அந்தத் தெய்வத்தையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்."உலகையும், அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர் கையால் கட்டிய திருக்கோவில்களில் அவர் குடியிருப்பதில்லை.அனைவருக்கும் உயிரையும் மூச்சையும் மற்றனைத்தையும் கொடுப்பவர் அவரே. எனவே மனிதர் கையால் செய்யும் ஊழியம் எதுவும் அவருக்குத் தேவையில்லை.ஒரே ஆளிலிருந்து அவர் மக்களினம் அனைத்தையும் படைத்து அவர்களை மண்ணுலகின்மீது குடியிருக்கச்செய்தார் அவர்களுக்குக் குறிப்பிட்ட காலங்களையும் குடியிருக்கும் எல்லைகளையும் வரையறுத்துக் கொடுத்தார்.கடவுள் தம்மை அவர்கள் தேடவேண்டும் என்பதற்காக இப்படிச்செய்தார் தட்டித் தடவியாவது தம்மைக் கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்தார். ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார்.அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம். உங்கள் கவிஞர் சிலர் கூறுவதுபோல, "நாம் அவருடைய பிள்ளைகளே."நாம் கடவுளுடைய பிள்ளைகளாய் இருப்பதால், மனித கற்பனையாலும் சிற்ப வேலைத் திறமையாலும் உருவாக்கப்பட்ட பொன், வெள்ளி, கல் உருவங்களைப் போலக் கடவுள் இருப்பார் என நாம் எண்ணுவது முறையாகாது.ஏனெனில் மக்கள் அறியாமையில் வாழ்ந்த காலத்தில் கடவுள் இதனைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்போது எங்குமுள்ள மக்கள் யாவரும் மனம் மாறவேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார்.ஏனென்றால் ஒருநாள் வரும். அப்போது தாம் நியமித்த ஒருவரைக் கொண்டு அவர் உலகத்துக்கு நேர்மையான தீர்ப்பு அளிப்பார். இறந்த அவரை உயிர்த்தெழச் செய்ததன் வாயிலாக இந்நம்பிக்கை உறுதியானதென எல்லாருக்கும் தெளிவுபடுத்தினார்." "இறந்தவர் உயிர்த்தெழுதல்" என்பது பற்றிக் கேட்டதும் சிலர் அவரைக் கிண்டல் செய்தனர். மற்றவர்கள், "இதைப்பற்றி நீர் மீண்டும் வந்து பேசும் கேட்போம்" என்றார்கள்.அதன்பின் பவுல் அவர்கள் நடுவிலிருந்து வெளியேசென்றார்.சிலர் நம்பிக்கை கொண்டு அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். அவர்களுள் அரயோபாகு மன்றத்தின் உறுப்பினரான தியோனிசியுவும் தாமரி என்னும் பெண் ஒருவரும் வேறு சிலரும் அடங்குவர்.இவற்றுக்குப் பின்பு பவுல் ஏதென்சை விட்டுக் கொரிந்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே விண்ணும் மண்ணும் உமது
மாட்சிமையால் நிறைந்துள்ளது.

## நற்செய்தி : யோவான் 16 : 12 - 15

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது:
"நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார் தாம் கேட்பதையே பேசுவார் வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார்.அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிப்படுத்துவார். தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவேதான் "அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்" என்றேன்.

**தியானம்:** வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். இந்த போராட்டத்தில் நம்மை நிலைநிறுத்தி வெற்றி காண்பதில் வெற்றி அடங்கியிருக்கின்றது. எதற்காக வாழ்க்கை ஒரு போராட்டமாக இருக்கின்றது? நாம் நினைப்பது ஒன்றாக இருக்கின்றது. ஆனால் நாம் செய்வது மற்றொன்றாக இருக்கின்றது. ஏன் இந்த உலகத்தில் நடக்கின்ற நிகழ்வுகள் நாம் நல்லது செய்ய நினைக்கின்றோம் அதற்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தோல்வியில் தான் முடிவடைகின்றன. இயேசுவின் வார்த்தைகளை நமது வாழ்வில் வாழ்ந்து காட்ட முற்படுகின்ற போதும், இயேசு காட்டிய வழியில் நாம் வாழமுற்படும் போதும் இந்த உலகத்தில் நாம் வித்தியாசமாக பார்க்கப்படுகின்றோம். இந்த உலத்தில் நாம் வாழ்ந்தாலும் இந்த உலக மதிப்பீடுகளுக்கு எதிராக நம் வாழ்வை அமைத்துக் கொள்வதால் இந்த உலகம் நம்மை வெறுக்கும் என்ற எச்சரிக்கை உணர்வை இயேசு நமக்குத் தருகின்றார். அத்தகைய போராட்ட வாழ்விலும் கடவுளின் அருள் நம்மோடு இருப்பதால் அது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை தரும். வாழ்வின்நிறைவை தரும், அது தான் உண்மையான சாட்சிய வாழ்வாகும். வாழ்க்கைபோராட்டத்தில் வெற்றி பெறுவது எளிதான காரியம் அல்ல, அது ஒரு சவாலான காரியம். ஆனால் அதில் வெற்றி பெற்றவர்களை வரலாறு நினைவில் வைத்திருக்கின்றது. அவர்களை உதாரணங்களாக நமக்கு தருகின்றது. நமது வாழ்வில் நமது பெயரும் வரலாற்றில் இடம் பெறும் அளவிற்கு நாமும் சிறப்பாக வாழ முயற்சிப்போம் ஆமென்.